# நீதித்துறையின் சுயாதீனத்தை உறுதிப்படுத்தக் கோரி கிளிநொச்சி நகரில் இன்று கவனயீர்ப்புப் போராட்டம்!






**சட்டத்தரணிகளும் பங்கேற்பு**

**(கிளிநொச்சி, ஒக். 02)**

**இலங்கைத்தீவில் நீதித்துறை மீது அரச நிர்வாகத்துறையினரால் மேற்கொள்ளப்பட்டுவரும் பல்வகை நெருக்கீடுகள் காரணமாக, நாட்டைவிட்டு வெளியேறிச்சென்றுள்ள முல்லைத்தீவு மாவட்ட கௌரவ நீதிவான் ரி.சரவணராஜா அவர்களுக்கு நீதியும் பாதுகாப்பும் கிடைக்கக் கோரியும், நீதித்துறையினது சுயாதீனத்தைப் பாதுகாக்கக் கோரியும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு (இலங்கைத் தமிழ் அரசுக் கட்சி) கிளிநொச்சி மாவட்டக் கிளையின் ஏற்பாட்டில், கிளிநொச்சி மாவட்ட சட்டத்தரணிகளின் பங்கேற்போடு இன்றைய தினம் கிளிநொச்சி நகரில் கவனயீர்ப்புப் போராட்டம் ஒன்று முன்னெடுக்கப்பட்டுள்ளது.**

**இது தொடர்பில், ஐக்கிய நாடுகள் சபையின் பொதுச்செயலாளர் அன்ரனியோ குட்ரெஸ் அவர்களுக்கு அனுப்பிவைப்பதற்கு ஏதுவாக, நாளைய தினம் கொழும்பில் வைத்து, ஐக்கிய நாடுகள் சபையின் இலங்கைக்கான வதிவிடப்பிரதிநிதி மார்க் ஆன்ட்ரே பிரான்ச் அவர்களிடம், நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரனால் கையளிக்கப்படவுள்ள "இலங்கை நீதித்துறை மீதான அரச நெருக்கீடுகளுக்கு பரிகாரம் காண்பதற்கான பரிந்துரைப்பு மனு" வாசிக்கப்பட்டது.**

2 ➤

மாலைக்கதிர்
Maalaikkathir




சாயல் 01 வள்ளுவர் ஆண்டு 2054 புரட்டாதி 15 திங்கட்கிழமை 02.10.2023 கதிர் 83

## ஆயுதப் போராட்டத்தைக் கைவிட்டமைக்காக வருந்துகிறோம் நூல் வெளியீட்டில் செல்வம் அடைக்கலநாதன் எம்.பி. தெரிவிப்பு

தென்னிலங்கைக்குச் சிம்மசொப்பனமாக இருந்த ஆயுதப்போராட்டத்தினை முன்னெடுத்த தாங்கள் இன்று ஏன், அதனைக் கைவிட்டோம்? என எண்ணி வருந்துவதாக தமிழீழ விடுதலை இயக்கத்தின் தலை வரும் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான செல்வம் அடைக்கலநாதன் தெரிவித்துள்ளார்.

தமிழீழ விடுதலை இயக்கத்தின் செயலாளர் நாயகம் கோவிந்தன் கருணாகரமின் 60 ஆவது பிறந்த நாளை முன்னிட்டு, மட்டக்களப்பு தேவாநாயகம் மண்டபத்தில் நடைபெற்ற "ஜனாவின் வாக்கு மூலம்" என்ற நூல் வெளியீட்டு விழாவில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

இலங்கையில் எங்கு பார்த்தாலும் பிக்குகளின் நாட்டாமைத்தனத்தையும், முப்படைகள் தமிழர்களின் காணிகளை அபகரிக்கும் அடாவடித்தனத்தையும் காணக்கூடியதாக உள்ளது.


இதனையெல்லாம் பார்க்கும்போது, ஏன் ஆயுதப் போராட்டத்தினைக் கைவிட்டோம்? என வருத்தமாக உள்ளது. மீண்டும் ஆயுதப்போராட்டத்தினை ஆரம்பித்தால் என்ன? என்ற எண்ணமும் தோன்றுகின்றது எனத் தெரிவித்துள்ளார்.

குறித்த நிகழ்வில் கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமான், யாழ் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும் தமிழீழ விடுதலைக் கழகத்தின் தலைவருமான தர்மலிங்கம் சித்தார்த்தன், ஈ.பி. ஆர்.எல்.எப். கட்சியின் தலைவர்

2 ➤

## முல்லை. நீதிபதி இராஜிநாமா தொடர்பில் சி.ஐ.டி. விசாரணை

### அமைச்சர் டிரான் அலஸ் பணிப்புரை



குருந்தூர்மலை விவகாரம் தொடர்பான வழக்கை ஆராய்ந்து வந்த முல்லைத்தீவு மாவட்ட நீதிபதி ரி.சரவணராஜா தமது பதவியிலிருந்து விலகி வெளிநாடு சென்றமை தொடர்பில் முழுமையான விசாரணைகளை முன்னெடுக்குமாறு பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் டிரான் அலஸ் குற்றப் புலனாய்வுத் திணைக்களத்துக்குப் பணிப்புரை விடுத்துள்ளார்.

நீதிபதி ரி.சரவணராஜா தமது, பதவி விலகல்

2 ➤

## யாழில் காந்தி ஜெயந்தி காந்தீயம் ஏடும் வெளியீடு

மகாத்மா காந்தியின் 154 ஆவது பிறந்த தின கொண்டாட்ட நிகழ்வுகள் இன்று திங்கட்கிழமை காலை யாழ்ப்பாணத்தில் இடம்பெற்றன.

யாழிலுள்ள இந்தியத் துணைத் தூதரகத்தின் ஏற்பாட்டில், யாழ்ப்பாணம் வைத்தியசாலை வீதியில் உள்ள மகாத்மா காந்தியின் உருவச்சிலைக்கு மலர் மாலை அணிவிக்கப்பட்டு மரியாதை செலுத்தப்பட்டது.

நிகழ்வில் இந்தியத் துணைத் தூதுவர் ராகேஷ் நடராஜ் ஜெயபாஸ்கரன், யாழ்ப்பாணம் மாவட்ட செயலர் அ.சிவபாலசுந்தரன், வடக்கு மாகாண சபை அவைத் தலைவர் சீ.வீ.கே.சிவஞானம், சிவபூமி அறக்கட்டளையின் தலைவர் ஆறு திருமுருகன், வடக்கு மாகாணக் கல்வி அமைச்சின் செயலாளர் பற்றிக் நிரஞ்சன், வடக்கு மாகாணச் சுகாதாரப் பணிப்பாளர் த.சத்தியமூர்த்தி, யாழ்.மாநகர ஆணையாளர் இ.த.ஜெயசீலன் மற்றும் சமய சமூகப் பிரதிநிதிகள், இந்தியத் துணைத் தூதரக அதிகாரிகள், அகில இலங்கை காந்தி சேவா சங்கத்தின் பிரதிநிதிகள் எனப் பலரும் கலந்துகொண்டிருந்தனர்.

இதன்போது காந்தீயம் ஏடு வெளியிட்டு வைக்கப்பட்டு அதன் பிரதிகள் அனைவருக்கும் வழங்கி வைக்கப்பட்டன. (அ)

## காலவரையறையற்ற போராட்டத்தில் முல்லைத்தீவுச் சட்டத்தரணிகள்!

முல்லைத்தீவு சட்டத்தரணிகள் சங்கம் இன்று தொடக்கம் காலவரையறையற்ற தொடர் பணிப் புறக்கணிப்பை முன்னெடுக்கவுள்ளதாகத் தெரிவித்துள்ளது.

முல்லைத்தீவு நீதிபதி ரீ.சரவணராஜாவிற்கு இழைக்கப்பட்ட அநீதிக்கு நீதி கோரியே, குறித்த பணிப்புறக்கணிப்பு முன்னெடுக்கப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

முல்லைத்தீவுச் சட்டத்தரணிகள் சங்கத்தினைச் சார்ந்த சட்டத்தரணிகள் அனைவரும் நீதிமன்ற வழக்குகளில் முன்னிலையாகாது தொடர்ந்து நீதிமன்ற நடவடிக்கைகளைப் புறக்கணிப்பார்கள் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (க)

## ஆணைக்குழு உறுப்பினருக்கு நீதிமன்றம் அழைப்பாணை!

தேர்தல் ஆணைக்குழுவின் புதிய தலைவர் உள்ளிட்ட உறுப்பினர்களுக்கு மீண்டும் அழைப்பாணை அனுப்ப உயர் நீதிமன்றம் நடவடிக்கை எடுத்துள்ளது.

2023 ஆம் ஆண்டு உள்ளூராட்சித் தேர்தலை திட்டமிட்டபடி மார்ச் 9 இல் நடத்தத் தவறியதன் மூலம் மக்களின்

2 ➤

## கொரோனாத் தடுப்பில் பங்காற்றிய இருவருக்கு மருத்துவத் துறைக்கான நோபல் பரிசு அறிவிப்பு



கொரோனாத் தடுப்பூசி உற்பத்தியில் முக்கிய பங்கு வகித்த 2 மருத்துவர்கள், இந்த ஆண்டு மருத்துவத் துறைக்கான நோபல் பரிசுக்குத் தேர்வு செய்யப்பட்டுள்ளனர். நடப்பாண்டு மருத்துவத் துறைக்கான நோபல் பரிசு ஹங்கேரியைச் சேர்ந்த கற்றலின் கரிக்கோ, அமெரிக்காவைச் சேர்ந்த ட்ரூ வெய்ஸ்மன் ஆகிய மருத்துவர்களுக்குப் பகிர்ந்தளிக்கப்படுகிறது.

2023 ஆம் ஆண்டின் நோபல் பரிசு பெற்ற கற்றலின் கரிகோ மற்றும் ட்ரூ வெய்ஸ்மன் ஆகியோரின் கண்டுபிடிப்புகள் 2020 ஆம் ஆண்டின் பிற்பகுதியில் மிகவும் வெற்றிகரமான

2 ➤

# ஒட்டுமொத்த மக்களும் போராடவேண்டும்!



மின் கட்டண அதிகரிப்பிற்கு எதிராக ஒட்டுமொத்த மக்களும் போராட்டத்தில் ஈடுபட வேண்டும் என இலங்கைப் பொதுப்பயன்பாடுகள் ஆணைக்குழுவின் முன்னாள் தலைவர் ஜனக ரத்நாயக்க தெரிவித்துள்ளார்.

முறையற்ற வகையில் மின்கட்டணத்தை அதிகரிப்பதற்கு அரசாங்கம் எடுத்த முயற்சிகளுக்குத்தான் தடையாக இருந்த காரணத்தினாலேயே தன்னைப் பொதுப்பயன்பாடுகள் ஆணைக்குழுவின் தலைவர் பதவியில் இருந்து அரசாங்கம் நீக்கியது எனத் தெரிவித்துள்ளது.

மின்சார கட்டண அதிகரிப்பால் ஒட்டுமொத்த மக்களும் பாதிக்கப்பட்டுள்ள நிலையில் சர்வதேச நாணய நிதியத்தின் நிபந்தனைக்கு அமைய மின்சாரக் கட்டணத்தை மீண்டும் 22 முதல் 25 சதவீதம் வரை அதிகரிக்க மின்சார சபை கடந்த மாதம் 28 ஆம் திகதி பொதுப்பயன்பாடுகள் ஆணைக்குழுவுக்கு யோசனையை முன்வைத்துள்ளது.

ஒரு வருடத்தில் இரண்டு முறை மாத்திரமே மின் கட்டணத்தை அதிகரிக்க முடியும். அதற்கமைய இந்த ஆண்டு இரண்டு தடவைகள் முறையற்ற வகையில் மின்கட்டணம் அதிகரிக்கப்பட்டுள்ளது எனச் சுட்டிக் காட்டியுள்ளார்.

நியாயமற்ற மின்கட்டண அதிகரிப்பால் ஒட்டுமொத்த மக்களும் பாதிக்கப்பட்டுள்ளார்கள். சிறு மற்றும் நடுத்தரக் கைத்தொழிற்றுறை முழுமையாகப் பாதிக்கப்பட்டுள்ளது.

ஒட்டுமொத்த மக்களும் பொருளாதார நெருக்கடியாலும், வாழ்க்கைச் சுமை அதிகரிப்பாலும் பாதிக்கப்பட்டுள்ள நிலையில், மீண்டும் மின்கட்டணத்தை அதிகரித்தால் மக்களின் நிலை என்னவாகும் எனபதை ஆட்சியாளர்கள் சிந்தித்துப் பார்க்க வேண்டும்.

இலங்கைப் பொதுப்பயன்பாடுகள் ஆணைக்குழுவும் எந்தளவுக்கு சுயாதீனத்துடன் செயற்படும் என்பதும் தற்போது கேள்விக்குள்ளாக்கப்பட்டுள்ளது.

ஆகவே, மின்கட்டணத்தை மீண்டும் அதிகரிக்கும் அரசாங்கத்தின் முயற்சியை எதிர்த்து ஒட்டுமொத்த மக்களும் போராட்டத்தில் ஈடுபட வேண்டும் எனத் தெரிவித்தார். (க)

## பேருந்துக் கட்டணங்கள் அதிகரிக்கப்படாது!



எரிபொருள் விலை அதிகரிக்கப்பட்டாலும் பேருந்துக் கட்டணங்கள் அதிகரிக்கப்படாது, என இலங்கைத் தனியார் பேருந்து உரிமையாளர்கள் சங்கத்தின் தலைவர் கெமுனு விஜேரத்ன தெரிவித்துள்ளார்.

இன்று காலை இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

எதிர்காலத்தில் எரிபொருள் விலையில் திருத்தம் செய்யப்படுவதைப் போன்று மாதாந்தம் பேருந்துக் கட்டண திருத்தமும் மேற்கொள்ளப்படும் வகையில் தேசிய பேருந்துக் கட்டணத் திருத்தக் கொள்கையைத் திருத்துமாறு கோரவுள்ளதாக அவர் தெரிவித்துள்ளார். (04)

## கொரோனாத் தடுப்பில் .......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இரண்டு எம்.ஆர்.என்.ஏ. அடிப்படையிலான கொரோனா தடுப்பூசிகளுக்கு ஒப்புதல் கிடைக்க வாய்ப்பை ஏற்படுத்தின. அதன் மூலம், உலகம் முழுவதும் லட்சக்கணக்கானோர் காப்பாற்றப்பட்டனர்.

மருத்துவத்திற்கான நோபல் பரிசு பெற்ற கற்றலின் கரிகோ மற்றும் ட்ரூ வெய்ஸ்மன் இருவரும் அடிப்படை மூலக்கூறு மாற்றியமைக்கப்பட்ட எம்.ஆர்.என்.ஏ, எதிர்வினைகளை செயல்படுத்துவதைத் தடுக்கவும் மற்றும் செல்களுக்கு எம்.ஆர்.என்.ஏ வழங்கப்படும்போது புரத உற்பத்தியை அதிகரிக்கவும் பயன்படுகிறது என்பதைக் கண்டறிந்தனர் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இவர்கள் இருவரும் தங்கள் ஆய்வு முடிவுகளை 2005 ஆம் ஆண்டு வெளியிட்டிருந்தனர். ஆனால், அது அந்த நேரத்தில் அதிக கவனத்தைப் பெறவில்லை.

ஆனால், கொரோனாத் தொற்றின்போது மனித குலத்தைக் காப்பதற்கு எடுக்கப்பட்ட நடவடிக்கைகளின் முன்னேற்றங்களுக்கு அடித்தளம் அமைத்துக் கொடுத்தது. இதன் மூலம்தான், 2020 ஆம் ஆண்டின் தொடக்கத்தில் உலகம் முழுவதும் பரவத் தொடங்கிய கொரோனாத் தொற்றுக்கு எதிராக பயனுள்ள எம்.ஆர்.என்.ஏ. தடுப்பூசிகளை உருவாக்குவதற்கு முக்கிய காரணமாக அமைந்திருந்தது.

எனவே, மருத்துவத் துறையில் சிறப்பான பங்களிப்புக்காக இவர்களுக்கு நோபல் பரிசு வழங்கப்படவிருக்கிறது. நடப்பாண்டு நோபல் பரிசுக்கான அறிவிப்புகள் திங்கட்கிழமை தொடங்கின. பௌதீகவியல் பிரிவுக்கான நோபல் பரிசு செவ்வாய்க்கிழமையும், இரசாயனவியலுக்கு புதன்கிழமையும், இலக்கியத்துக்கு வியாழக்கிழமையும் பொருளாதாரத்துக்கான பரிசு விபரம் வெள்ளிக்கிழமையும் அறிவிக்கப்படவிருக்கின்றன. (04)

## ஆணைக்குழு உறுப்பினருக்கு .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அடிப்படை மனித உரிமைகள் மீறப்பட்டதாக மனு தாக்கல் செய்யப்பட்டது.

குறித்த மனு மீதான பரிசீலனை இன்று முன்னெடுக்கப்பட்ட நிலையில் 5 பேர் கொண்ட உயர் நீதிமன்ற அமர்வு இந்த உத்தரவைப் பிறப்பித்துள்ளது.

தேசிய மக்கள் சக்தி, ஐக்கிய மக்கள் சக்தி மாற்றுக் கொள்கைகளுக்கான மையம் மற்றும் பவ்ரல் அமைப்பினால் இந்த மனுக்கள் தாக்கல் செய்யப்பட்டன.

## முல்லை. நீதிபதி இராஜிநாமா ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கடிதத்தை, நீதிச் சேவைகள் ஆணைக்குழுவுக்குக் கடந்த 23ஆம் திகதி அனுப்பியிருந்தார். இது தொடர்பான கடிதம் கடந்த 28ஆம் திகதி வெளியாகியிருந்தது.

குருந்தூர்மலை விவகாரத்தில், முல்லைத்தீவு நீதிமன்றம் ஏற்கனவே வழங்கிய கட்டளைகளை மதிக்காது நிர்மாணப் பணிகள் இடம்பெற்றுள்ளன என்று முல்லைத்தீவு நீதவான் ரீ.சரவணராஜா குறிப்பிட்டிருந்தார்.

இதையடுத்து, தமக்கு ஏற்பட்டுள்ள அச்சுறுத்தல் மற்றும் அழுத்தங்கள் காரணமாக தாம் வகித்து வந்த நீதித்துறை சார்ந்த சகல பொறுப்புகளில் இருந்தும் விலகத் தீர்மானித்ததாக அவர் அந்தக் கடிதத்தின் ஊடாக அறிவித்திருந்தார்.

அத்துடன், தொல்பொருள் திணைக்களப் பணிப்பாளர் நாயகம் முல்லைத்தீவு நீதிமன்றக் கட்டளைகளை மதித்துச் செயற்படவில்லை என்றும் அவர் தெரிவித்திருந்தார்.

இந்தநிலையில், நாடாளுமன்ற உறுப்பினர் சரத் வீரசேகர நாடாளுமன்றில் பல்வேறு சந்தர்ப்பங்களில் முல்லைத்தீவு நீதிபதியின் தீர்ப்புக் குறித்து விமர்சித்திருந்தார்.

இவ்வாறான சூழலில், முல்லைத்தீவு நீதிபதி தமது பதவியில் இருந்து விலகியிருந்ததுடன், அவர் வெளிநாட்டுக்குச் சென்றுவிட்டார் என்றும் தகவல்கள் வெளியாகின.

இந்த நிலையில், அவர் வெளிநாடு சென்றமை தொடர்பில் பூரண விசாரணைகளை ஆரம்பிக்குமாறு பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் டிரான் அலஸ் குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தைப் பணித்துள்ளார்.

இதேவேளை, நீதிபதி ரி.சரவணராஜா பதவி விலகியமை தொடர்பில், முறையான விசாரணைகளை முன்னெடுக்குமாறு இலங்கைச் சட்டத்தரணிகள் சங்கம் பிரதம நீதியரசரிடம் கோரியுள்ளது. (அ)

## ஆயுதப் போராட்டத்தைக் ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சுரேஸ் பிரேமச்சந்திரன், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்களான கனகசபை, சீ.யோகேஸ்வரன், பா.அரியநேத்திரன், முன்னாள் மாகாணசபை உறுப்பினர் சிவாஜிலிங்கம் உள்ளிட்ட பலர் கலந்துகொண்டிருந்தனர். (க)

## முல்லைத்தீவு நீதிபதி .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அம்மனுவில் குறிப்பிடப்பட்டுள்ளதாவது, இலங்கைத் தீவில் கடந்த எழுபது ஆண்டுகளுக்கு மேலாக நீடித்து வருகின்ற இன முரண்பாடுகள் தொடர்பிலும், சிங்களத்தின் கட்டமைக்கப்பட்ட இனரீதியான வஞ்சிப்புகள் தொடர்பிலும், அது இனப்படுகொலையாக வியாபகம் பெற்ற வரலாறு தொடர்பிலும் தங்கள் அறிக்கையாளர்கள் ஊடாக தாங்கள் அறிந்துள்ளீர்கள் என்பதை நாம் அறிவோம்.

ஒரு தேசிய இனத்தின் பாரம்பரிய வாழ்விடங்கள் மீதும், அதன் கூட்டுப் பண்பாடுகள் மீதும் மேற்கொள்ளப்பட்டு வருகின்ற நீதி, நிருவாகத் துறை ரீதியான பாகுபாடுகள் மற்றும் காலத்துக்குக் காலம் அரசியல் யாப்புச் சீர்திருத்தங்களின் மூலமாக மேற்கொள்ளப்படுகின்ற வன்பறிப்புகள் என்பவை, உலகத்தில் வாழ்கின்ற எண்ணிக்கையில் குறைந்த ஒரு தேசிய இனக்குழுமத்தை எவ்வாறு நிர்மூலமாக்கும் என்பதை உணர்ந்துகொள்வது அத்தனை சிரமமானதல்ல.

இலங்கைத்தீவில் தமிழ்த்தேசிய இனம்மீது மேற்கொள்ளப்பட்ட இனப்படுகொலையும் ஓரவஞ்சகப் போக்கும் இன்று இலங்கைத்தீவில் உள்ள தேசிய இனங்கள் அனைத்தினதும் ஜனநாயக நீதித்துறை சார் உரிமைகளைப் பறித்துள்ளது என்பது நிதர்சனமாகும். அரசிற்குப் பலம் கிடைக்கின்ற போதெல்லாம் அரசியலமைப்பில் திருத்தங்களை மேற்கொண்டு நிருவாகத் துறையின் கைப்பொம்மையாக செயற்படும் விதமாகவே நீதித்துறை உருவாக்கப்பட்டு வருகிறது. நீதிச்சேவை ஆணைக்குழுவை நியமிக்கும் அதிகாரத்தை ஜனாதிபதிக்கு வழங்கி அதனூடாக நீதிபதிகளின் நியமனங்கள், பதவி உயர்வுகள், நலனோம்பு நயக்கொடைகள், பயிற்சிகள் மற்றும் பாதுகாப்பு என்பவையெல்லாம் அரசியல் அதிகார விருப்பப்படியே மேற்கொள்ளப்படுகின்றன.

இதன் மூலம் அரசு விரும்பிய தீர்ப்புகளைப் பெறவும், ஆணைகளை வழங்கவும், அரசியல் அதிகாரத்தைக் காபந்து செய்யவும் ஏற்றவகையில் இலங்கையின் நீதித்துறை ஒழுங்கமைக்கப்பட்டுள்ளது. இதனால் சட்டத்தின் ஆட்சி பறிக்கப்பட்டு நிருவாகத்துறையின் நோக்கங்களை அடையும் வகையில், விசேடமாக அரசாங்கத்தினது போர்க்குற்றங்கள், இனப்படுகொலை விடயங்கள், நீதிக்குப் புறம்பான கொலைகள், வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் விடயங்கள், மனிதப்புதைகுழி விவகாரங்கள், பௌத்தமயமாக்கல், நில மற்றும் பண்பாட்டு ஆக்கிரமிப்பு என்பவற்றை சட்டமுறைமைகளுக்கு முரணாகக் கையாள்வதற்கு நீதித்துறை நிர்ப்பந்திக்கப்பட்டதன் விளைவே கௌரவ நீதிபதி சரவணராஜா அவர்கள் நாட்டைவிட்டு வெளியேறிய நிகழ்வாகும்.

சிங்கள பௌத்த மேலாதிக்கத்தை தனது ஆட்சியின் நோக்காகக் கொண்டு சர்வாதிகாரச் சிந்தனைகளுக்கும் செயல்களுக்கும் ஜனநாயக முலாம் பூசிக்கொண்டு திடமான வெளியுறவு, பொருளாதாரக் கொள்கைகள் எவையுமின்றி, உறுதியான அரசியலமைப்பு ஏற்பாடுகளின்றி வெறும் இனத்துவேசச் சிந்தனைகளின்மேல் ஏறிநின்று இலங்கையின் நீதித்துறையினையும் இங்கு வாழ்கின்ற தமிழ்த்தேசிய இனத்தையும் கட்டமைக்கப்பட்ட வழிமுறைகளின் ஊடாக அரசு அழித்து, ஒழித்து வரும் உச்சத் தருணமாகிய இவ்வேளையில் தாங்களும் சர்வதேச சமூகமும் நேரடியாகத் தலையீடு செய்து அமைதி, சமாதானம், நல்லிணக்கம், நீதித் துறையின் சுயாதீனம் என்பவற்றைப் பாதுகாக்கவும் சகோதரத்துவம் மிக்க இலங்கையைக் கட்டியெழுப்பவும் தங்களது எல்லாவகை வல்லமைகளும் அணுகுமுறைகளும் சமரசங்களற்ற வகையில் இலங்கைத்தீவுக்குத் தேவையென தங்களை அழைத்து நிற்கிறோம் - என்றுள்ளது. (அ)

உங்கள் பிரதேசத்து நிகழ்வுகள் பற்றிய விபரங்களை எமக்கு அனுப்பிட
maalaikkathir@gmail.com

செய்திகளையும் இன்னும் பல காணொளிகளையும் பார்வையிட
காலைக்கதிர் TV YouTube தளம்

# கல்முனை சாஹிரா தேசிய பாடசாலையின் சாரணர்களுக்கான மூன்று நாள் முகாம்




(நூருல் ஹுதா உமர்)

கல்முனை சாஹிரா கல்லூரியில் செப்டெம்பர் 28 முதல் 30 வரை 3 நாட்கள் கொண்ட சாரணர் பயிற்சி முகாம் நடைபெற்றது.

செப்டம்பர் 28 ஆம் திகதி பி.ப 4.30 க்கு சாரணர் பயிற்சி முகாமினைக் கல்லூரி அதிபர் எம்.ஐ.ஜாபிர் ஆரம்பித்து வைத்தார். சாரணப் பொறுப்பாசிரியர் மேஜர் கே. எம். தமீம் அவர்களது ஒழுங்கமைப்பில் நடைமுறைப்படுத்தப்பட இம்முகாமில் சாரணப் பயிற்றுவிப்பாளர்களான உதவி மாவட்ட ஆணையாளர் பயிற்சி எஸ். தஸ்தகீர் , தேசியப் பயிற்றுவிப்பாளர் எம். ஏ. சலாம், சாரணர் பயிற்சிக் குழு உறுப்பினர்களான எம். ஹஸ்மின் புஹாரி, எஸ்.ஏ. முஹம்மட் அஸ்லம், டப்லியூ.ஷவ்தப் உசைம், எம்.எம்.எம். நூஹ், ஐ. எம். இஃஜாஸ், எம். எஸ். எம். அஸ்மான், எம். எப். எம். பஹாட், ஆகியோர் கலந்து கொண்டனர்.

குறித்த பயிற்சிப் பாசறையில் சாரணர்களுக்கான போக்குவரத்துச் சமிக்ஞைகள், திசைகாட்டி வரைபடம், துணிகரச் செயற்பாடுகள், தகவல் தொடர்பாடல் தொழிநுட்பம் சம்பந்தமான விரிவுரை, தீப்பாசறை, போதைப் பொருளை ஒழிப்பது சம்பந்தமான விழிப்புணர்வு நடை பவனி, பாத்திரமின்றிச் சமைக்கும் முறைமை, சாரணர்கள் தங்கியிருக்கும் கூடாரப் பரிசோதனை, குறியீடுகள், நில அளவைகள் சம்பந்தமான விரிவுரைகளும் பயிற்சிகளும், கட்டு முறைகள் போன்ற பல செயற்பாடுகளுடன் கூடிய நிகழ்வுகள் நடைபெற்றன.

இறுதி நிகழ்வாக 3 நாள் பாசறையினை வெற்றிகரமாக முடித்த சாரணர்கள் சான்றிதழ்கள் வழங்கிப் கௌரவிக்கப்பட்டனர்.



# விபுலானந்தா நாட்டிய நிருத்தியாலய மாணவிகள் இரண்டாமிடம் பெற்றனர்

( வி.ரி.சகாதேவராஜா)

காரைதீவு, ஒக். 02

காரைதீவு விபுலாநந்தா நாட்டிய நிருத்தியாலய மாணவிகள் முதல் முறையாக தேசியத் தமிழ் - சிங்கள நடனப் போட்டியில் பங்குபற்றி இரண்டாமிடத்தைப் பெற்றுள்ளனர்.

இத்தமிழ் சிங்கள நடனத் தேசிய மட்ட போட்டியானது நேற்றுக் கண்டி பொல்கொல மகாவலி தேசிய கல்வியியற் கல்லூரியில் நடைபெற்றது.

புத்தசாசன மற்றும் கலை,கலாசார அமைச்சின் ஏற்பாட்டில் "பிரதீபா" தேசிய மட்டப் போட்டிக்கு கல்முனை கலாசார மத்திய நிலையத்தினூடாகக் காரைதீவு விபுலானந்தா நாட்டிய நிருத்தியாலய மாணவிகள் நடன ஆசிரியை திருமதி சர்மினி சுதாகரன் மற்றும் ஸ்தாபகர் ஜெயகோபன் தக்ஷாளினி ஆகியோரின் வழி நடத்தலில் பங்கேற்றனர். அங்கு அவர்கள் 2 ஆம் இடம் பெற்றனர். வவுனியா நிருத்தியாலயம் முதலிடத்தைப் பெற்றது.

விபுலானந்தா நாட்டிய பாடசாலை தொடங்கி நான்கு வருட காலத்தில் முதல் தடவையாகத் தேசிய மட்டத்தில் தோற்றி இரண்டாம் இடத்தைப் பெற்றிருப்பது குறிப்பிடத்தக்கது.



# யாழ் மணியம் தோட்டத்தில் இடம்பெற்றது எங்கள் வாழ்வும் எங்கள் வளமும் - கண்காட்சி

கியூடெக் கரித்தாஸ் நிறுவனத்தின் வழிநடத்தலில் மணியம் தோட்டம் ஒன்றிணைந்த சமூக மேம்பாட்டுக்கான அமைப்பின் கீழ் இயங்கும் 'இணைந்த கரங்கள்' நடத்தும் 'எங்கள் வாழ்வும் எங்கள் வளமும்' என்னும் கண்காட்சி எதிர்வரும் சனிக்கிழமை காலை 9.30 மணிமுதல் மாலை 5.30 மணிவரை மணியம் தோட்டம் இரண்டாம் குறுக்குத் தெருவில் நடைபெற்றது.

இந்தக் கண்காட்சியில், யாழ்ப்பாணத்தை ஆண்ட தமிழ் மன்னர்கள், இலங்கையின் சர்வமத இனமக்களும் அவர்களின் உணவுப் பழக்கங்களும், எதிர்காலச் சமூகம் மறந்து போகும் பழைய காலத்துப் பாவனைப் பொருட்கள் உட்படப் பல்வேறு வகையான படைப்பாக்கங்கள் இடம்பெற்றிருந்தன.

இவற்றுடன் மணியந்தோட்ட மண்ணில் உற்பத்தி செய்யப்படும் பொருட்களின் விற்பனைக் கூடம், மகிழ்வூட்டும் விளையாட்டுக்கள் என்பனவும் காட்சிப்படுத்தப் பட்டிருந்தன.

சிறுவர்களையும், இளைஞர்களையும்,பெண்களையும் முதன்மைப்படுத்தி அவர்களின் திறன்களை வெளிக் கொண்டுவரும் வகையில் இக்கண்காட்சி ஒழுங்கு செய்யப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (04)

# அட்டாளைச்சேனை கிராமத்தில் காட்டு யானைகள் அட்டகாசம்



அம்பாறை மாவட்டத்தில் காட்டு யானைகளின் அட்டகாசம் அதிகரித்துவருவதாக பொதுமக்கள் தெரிவிக்கின்றனர்.

அட்டாளைச்சேனை 9 ஆம் கிராமப் பிரிவில் அண்மையில் நடுநிசியில் உட்புகுந்த காட்டு யானைகள் அங்கு பலரது மதில் சுவர்களை உடைத்து தோட்டப்பயிர்களை துவம்சம் செய்துள்ளன. இதன் காரணமாக இப்பிரதேச மக்கள் பீதி அடைந்துள்ளனர்.

அவர்களின் பெறுமதியான சொத்துகளுக்கும் சேதம் ஏற்பட்டுள்ளதாகத் தெரிவிக்கின்றனர். அட்டாளைச் சேனைப் பிரதேச செயலகப் பிரிவில் சம்புநகர், முல்லைத் தீவு, திராய்க்கேணி, பாலமுனை கிறா நகர், ஒலுவில் அஷ்ரப் கிராமங்களிலுள்ள மக்கள் தொடர்ச்சியாகக் காட்டு யானைகளின் அட்டகாசத்தால் பெரிதும் பாதிக்கப்பட்டு வருகின்றனர்.

காட்டு யானைகளின் வருகையைக் கட்டுப்படுத்த சம்பந்தப்பட்ட அதிகாரிகள் நடவடிக்கை எடுக்க வேண்டுமென மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.



# மெக்ஸிகோவில் தேவாலயத்தின் மேற்கூரை இடிந்து 7 பேர் பலி!



மெக்ஸிகோவின் தமௌலிபாஸ் மாநிலத்தில் உள்ள சாண்டா குரூஸ் தேவாலயத்தின் மேற்கூரை இடிந்து விழுந்ததில் 7 பேர் பலியானதாகத் தெரிவிக்கப்படுகிறது.

30 க்கும் மேற்பட்டோர் இடிபாடுகளுக்குள் சிக்கியுள்ளதாக ஆரம்பக் கட்டத் தகவல்கள் வெளியாகியிருந்தன. தேவாலயம் இடிந்து விழுந்த நேரத்தில் 100 பேர் உள்ளே இருந்ததாகவும் கூறப்படுகிறது.

இடிபாடுகளில் சிக்கியோரில் பல குழந்தைகள் இருப்பதாகவும் உள்ளூர் ஊடகங்கள் தெரிவித்துள்ளன. உள்ளே சிக்கியவர்களைத் தேடும் பணி தீவிரமாக நடைபெற்று வருகின்றது.

மேற்கூரையில் திடீரென விரிசல் ஏற்பட்டு இடிந்து விழுந்ததால் அப்பகுதியில் பெரும் பரபரப்பு ஏற்பட்டது. சம்பவ இடத்தில் பொலிஸாரும் மீட்புப் படையினரும் இணைந்து தேடுதல் பணியில் ஈடுபட்டுள்ளனர். (04)

## தரகர்கள் மூலம் யாசகம் எடுக்கச் சவுதிக்குப் பயணம் விமான நிலையத்தில் பாகிஸ்தானியர் 16 பேர் கைது



புனிதப் பயணம் செல்வதாகக் கூறிப் பாகிஸ்தானியர்கள் பலர் யாசகம் எடுப்பதற்காகச் சவுதி அரேபியாவுக்குச் செல்வது அதிகரித்து வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இந்நிலையில், பாகிஸ்தானின் முல்தான் நகர விமான நிலையத்தில் இவ்வாறு யாசகம் எடுப்பதற்காக சவுதி அரேபியா செல்ல முயன்ற 16 பேர் கைது செய்யப்பட்டனர்.

பாகிஸ்தான் கடுமையான பொருளாதாரச் சீர்குலைவை எதிர்கொண்டுள்ளது. விலைவாசி உயர்வால் அத்தியாவசியப் பொருள்களைக்கூட வாங்க முடியாத நிலைக்குச் சாமானிய மக்கள் தள்ளப்பட்டுள்ளனர். இந்நிலையில், அந்நாட்டில் பலர் யாசித்துப் பிழைப்பதற்காக சவுதி அரேபியாவை நோக்கிப் படையெடுப்பதும் அதிகரித்து வருகிறது.

இது தொடர்பாகப் பாகிஸ்தான் வெளிநாட்டு விவகாரங்களுக்கான நாடாளுமன்ற நிலைக் குழுவிடம் அந்நாட்டு வெளிநாட்டு விவகாரங்கள் துறைச் செயலர் ஜிஷான் கான்ஷாதா கூறுகையில், ‘பாகிஸ்தானில் இருந்து புனிதப் பயணத்துக்காக மத்திய கிழக்குக்குச் செல்லும் பலர் சவுதி அரேபியாவுக்குச் செல்வது அதிகரித்துள்ளது. புனிதப் பயணத்துக்கான சிறப்பு நுழைவு வீசாவைப் பெற்றுச் செல்லும் அவர்கள், அங்கு யாசகம் எடுப்பதை வழக்கமாகக் கொண்டுள்ளனர்.

அதேபோல மெக்கா நகரில் சிறிய அளவிலான திருட்டுச் சம்பவங்களில் ஈடுபட்டுக் கைது செய்யப்படுபவர்களில் பெரும்பாலானவர்கள் பாகிஸ்தானைச் சேர்ந்தவர்களாகவே உள்ளனர். இது தொடர்பாக அந்நாட்டில் உள்ள பாகிஸ்தான் தூதரகத்துக்குப் புகார்கள் வந்துள்ளன’ என்று கூறியுள்ளார்.

இதனிடையே, பாகிஸ்தானின் பஞ்சாப் மாகாணம் முல்தான் நகரில் இருந்து புனிதப் பயண நுழைவு வீசாவைப் பயன்படுத்திச் சவுதி அரேபியாவுக்கு யாசகம் எடுப்பதற்காகச் செல்ல முயன்ற 16 பேர் காவல் துறையினரால் கைது செய்யப்பட்டனர். இதில் 11 பெண்கள், 4 ஆண்கள், ஒரு சிறுவன் அடங்குவர்.

விசாரணையில், புனிதப் பயண அனுமதியைப் பயன்படுத்தி சவூதி அரேபியா சென்று யாசகம் எடுப்பதை அவர்கள் ஒரு தொழிலாகச் செய்து வருவதும், விசா அனுமதிக் காலம் வரை அங்கு தங்கி யாசகம் எடுத்து, வருமானத்தில் பாதியைச் சவுதி அரேபியாவுக்கு அனுப்பும் இடைத்தரகர்களுக்கு அளித்து வருவதும் தெரியவந்துள்ளது. (04)

## பொருளாதார வழித்தடம் அமைப்பு முயற்சி பாகிஸ்தானுக்கு நிதி அளிக்கச் சீனா மறுப்பு



இந்தியாவின் எதிர்ப்பை மீறிச் செயல்படுத்தப்பட்டு வந்த சீனா - பாகிஸ்தான் பொருளாதார வழித்தடத் திட்டத்துக்கான அடுத்தகட்ட நிதியை பாகிஸ்தானுக்கு அளிக்கச் சீனா மறுத்துவிட்டது.

சீனா - பாகிஸ்தான் நாடுகளில் உள்ள (ஜிங்ஜியான் - குவாதர் துறைமுகம்) முக்கிய நகரங்களை இரும்புப் பாதை, சாலைகள், எண்ணெய், எரிவாயுக் குழாய்கள் மூலம் இணைப்பதே பொருளாதார வழித்தடத் திட்டத்தின் நோக்கமாகும். பாகிஸ்தான் ஆக்கிரமிப்பு காஷ்மீர் வழியாக இத்திட்டத்தைச் செயல்படுத்த திட்டமிட்டிருந்ததால் அதற்கு இந்தியா எதிர்ப்புத் தெரிவித்து வருகிறது. எனினும், இதை மீறி இரு நாடுகளும் இத்திட்டத்தைச் செயற்படுத்த முனைப்புக் காட்டின.

2013 ஆம் ஆண்டு தொடங்கப்பட்ட இத்திட்டத்தின் கீழ் பாகிஸ்தானில் இதுவரை இந்திய மதிப்பில் 2 இலட்சம் கோடி வரை சீனா முதலீடு செய்துள்ளது. 2030 இல் முடிக்க திட்டமிடப்பட்டுள்ள இத்திட்டத்தின் மொத்த மதிப்பு இந்திய நாணயத்தில் 5 இலட்சம் கோடியாகும். இத்திட்டத்தை தொடர்ந்து முன்னெடுத்துச் செல்வது தொடர்பாக கடந்த மாத இறுதியில் இரு நாடுகளுக்கும் இடையே நடைபெற்ற பேச்சுவார்த்தை தோல்வியில் முடிந்தது. இதையடுத்து, இத்திட்டத்துக்கு அடுத்தகட்டமாக நிதி ஒதுக்கச் சீனா மறுத்துவிட்டது.

இத்திட்டத்தின்கீழ் கட்டுமானப் பணிகள் நடைபெறும் பாகிஸ்தான் பிராந்தியத்தில் சீனத் தொழிலாளர்களுக்கு உரிய பாதுகாப்பு இல்லாதது, பாகிஸ்தானில் அதிகரித்து வரும் பயங்கரவாதம், மோசமாகி வரும் பொருளாதார நிலை ஆகியவையே சீனா இத்திட்டத்தில் இருந்து பின்வாங்கக் காரணம் என்று கூறப்படுகிறது.

பாகிஸ்தானில் சீனத் தொழிலாளர்கள் குண்டு துளைக்காத வாகனங்கள் மூலம் சில இடங்களில் பயணிக்கும் அளவுக்கு நிலைமை மோசமாகக் காணப்படுகிறது. பாகிஸ்தான் தரப்பிலும் உள்ளூர் மக்களின் கடுமையான எதிர்ப்பை மீறித்தான் இத்திட்டத்தைச் செயல்படுத்துகிறது. நிலம் கையகப்படுத்துதலில் தொடங்கி பல்வேறு பிரச்சினைகளை பாகிஸ்தான் எதிர்கொண்டு வருகிறது.

இத்திட்டத்தைச் செயல்படுத்த அதிக அளவில் மின்சாரம் வழங்க வேண்டியிருப்பதும் பாகிஸ்தானில் தொடர் மின்வெட்டுக்கு காரணமாகிறது. எனினும், இத்திட்டத்தை எப்படியாவது நிறைவேற்றிவிட்டால் அதனால் பலன் கிடைக்கும் என்று பாகிஸ்தான் எண்ணியிருந்தது. ஆனால், சீனா நினைத்த அளவுக்கு சில நடவடிக்கைகளில் பாகிஸ்தான் வேகம்காட்டவில்லை.

மேலும், பாகிஸ்தான் தரப்பில் இருந்து சீன நிறுவனங்களுக்குத் தரப்பட வேண்டிய நிதியும் அளிக்கப்படவில்லை. இதையடுத்து, இத்திட்டத்தில் எரிசக்தி, நீர் மேலாண்மை, சுற்றுச்சூழல் பாதுகாப்பு ஆகிய பிரிவுகளில் இனி நிதி ஒதுக்க முடியாது என்று சீனா கூறிவிட்டது. இதனால், சீனா - பாகிஸ்தான் பொருளாதார வழித்தட திட்டம் பின்னடைவைச் சந்தித்துள்ளது. (04)

## துருக்கி தலைநகரில் தற்கொலைத் தாக்குதல்! 2 ஆவது முயற்சி பொலிஸாரால் முறியடிப்பு



துருக்கி தலைநகர் அங்காராவில் தற்கொலை வெடிகுண்டுத் தாக்குதல் ஒன்று நேற்று நடத்தப்பட்டது. இதைத் தொடர்ந்து, இரண்டாவதாகவும் மற்றுமொரு தற்கொலை வெடிகுண்டுத் தாக்குதலை நடத்த முயன்ற நபரை பொலிஸார் சுட்டுக்கொன்றுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

மூன்று மாத கோடை கால இடைவெளிக்குப் பிறகு, அதிபர் ரிசப் தயீப் எர்டோகனின் ஆரம்ப உரையுடன் துருக்கி நாடாளுமன்றம் கூட இருந்த சில மணி நேரங்களுக்கு முன்பாக, இந்தத் தாக்குதல் நடைபெற்றது.

இந்தச் சம்பவம் குறித்து உள்துறை அமைச்சர் அலி யெர்லிகாயா சமூக வலைத்தளத்தில் வெளியிட்ட பதிவில், ‘உள்துறை அமைச்சக அலுவலகத்தின் நுழைவு வாயிலுக்கு அருகில் நடைபெற்ற இந்தத் தற்கொலை வெடிகுண்டுத் தாக்குதலில், 2 பொலிஸார் காயமடைந்தனர்.

கொலையாளிகள் இருவரும் சம்பவ இடத்துக்கு வாகனத்தில் வந்தனர். இதில், ஒரு நபர் தான் மறைத்து வைத்திருந்த வெடிகுண்டை வெடிக்கச் செய்து உயிரிழந்த நிலையில், மற்றொரு நபரும் இதற்கான முயற்சியில் இறங்கியபோது, அவரைப் பொலிஸார் சுட்டுக் கொன்றனர்.

பயங்கரவாதிகள், அவர்களது கூட்டாளிகள், போதைப் பொருள் கடத்தல்காரர்கள், திட்டமிட்ட குற்றச் செயலில் ஈடுபடும் அமைப்புகளுக்கு எதிராக துருக்கி தொடர்ந்து தீர்க்கமாகப் போரிடும்’ எனக் குறிப்பிட்டுள்ளார்.

இந்தத் தாக்குதலுக்கு எந்த அமைப்பும் பொறுப்பேற்காத நிலையில், அமைச்சரும் இது குறித்து எவ்விதத் தகவலையும் தெரிவிக்கவில்லை. குர்து இனப் பிரிவினைவாதிகள், தீவிர இடதுசாரிப் பயங்கரவாத அமைப்புகள், ஐ.எஸ். அமைப்பு உள்ளிட்டவை துருக்கியில் மோசமான தாக்குதல்களைக் கடந்த காலங்களில் நடத்தியிருக்கின்றன.

இஸ்தான்புலில் கடந்த ஆண்டு நடைபெற்ற வெடிகுண்டுத் தாக்குதலில், 2 குழந்தைகள் உள்பட 6 பேர் உயிரிழந்தனர். 80க்கும் மேற்பட்டோர் காயமடைந்தனர். இந்தத் தாக்குதலுக்கு குர்திஸ்தான் தொழிலாளர்கள் கட்சியையும் சிரியா குர்துக் குழுக்களையும் துருக்கி அரசு குற்றஞ்சாட்டியது.

உக்ரைன் மீது ரஷ்யா போர் தொடுத்த நிலையில், சுவீடன், பின்லாந்து ஆகிய நாடுகள் நேட்டோ கூட்டமைப்பில் இணைய விண்ணப்பித்தன. பின்லாந்து நேட்டோவில் இணைந்த நிலையில், தங்கள் நாட்டுக்கு அச்சுறுத்தலாக இருக்கும் குர்து இன அமைப்புகளுக்கு சுவீடன் ஆதரவு தெரிவித்து வருவதாகத் துருக்கி குற்றஞ்சாட்டி வருகிறது.

இந்த நிலையில், நேட்டோவில் சுவீடனை இணைக்கும் முடிவுக்குத் துருக்கி நாடாளுமன்றம் ஒப்புதல் அளிக்கலாம் என்ற நிலையில், இதுகுறித்த அதிபர் எர்டோகனின் உரை முக்கியத்துவம் பெற்றுள்ளது. (04)

# சிறுவர் தினத்தில் சகல மாணவர்களுக்கும் உணவளித்த அன்னமலை ஆசிரியர்கள்!



(காரைதீவு செய்தியாளர்)

சர்வதேச சிறுவர் தினத்தையொட்டிய நிகழ்வில் பாடசாலையில் பயில்கின்ற சகல மாணவர்களுக்கும் ஆசிரியர்கள் மதியபோசனத்தை வழங்கி அவர்களை மகிழ்ச்சிப்படுத்தினர்.

இந்நிகழ்வு சம்மாந்துறை வலயத்தில் உள்ள நாவிதன்வெளி அன்னமலை மகா வித்தியாலயத்தில் இன்று நடைபெற்றது .

சர்வதேச சிறுவர் தின நிகழ்வு வித்தியாலய அதிபர் திருமதி நிலந்தினி ரவிச் சந்திரன் தலைமையில் நடைபெற்றது. பிரதம அதிதியாக பாடசாலை இணைப்பாளரும் உதவிக் கல்விப் பணிப்பாளருமான வி.ரி. சகாதேவராஜா கலந்துகொண்டார்.

கயிறு ,ழுத்தல் போட்டி, சங்கீதக் கதிரை, சங்கீதத் தொப்பி போன்ற மாணவர்களின் விளையாட்டு நிகழ்வுகளும் பாடல் பேச்சு என்பனவும் இடம் பெற்றன. போட்டிகளில் வெற்றி பெற்றவர்களுக்குப் பரிசுகள் வழங்கப்பட்டன.

## காவிரி விவகாரம் தொடர்பாகக் கலந்துரையாட அனைத்துக் கட்சிக் கூட்டம் - இபிஎஸ் வலியுறுத்து



காவிரி விவகாரத்தில் அடுத்த கட்ட நடவடிக்கை குறித்து ஆலோசிப்பதற்காக அனைத்துக் கட்சிகள் கூட்டத்தைத் தமிழக அரசு கூட்ட வேண்டும் என்று அதிமுக பொதுச்செயலர் எடப்பாடி கே.பழனிசாமி வலியுறுத்தியுள்ளார்.

அவர் வெளியிடுள்ள அறிக்கையில், காவிரி டெல்டா பாசனத்துக்காக ஜூன் 12 இல் மேட்டூர் அணையிலிருந்து தண்ணீரை முதல்வர் ஸ்டாலின் திறந்துவிட்டார். இதை நம்பிச் சுமார் 1.50 லட்சம் விவசாயிகள் பணம், நகை, விதை நெல், வங்கிக் கடன் மற்றும் உடல் உழைப்பையும் மூலதனமாக்கி, 5 இலட்சம் ஏக்கர் பாசனப் பகுதிகளில் குறுவை சாகுபடியைத் தொடங்கினர்.

ஆனால், போதிய தண்ணீரின்றி 3.50 லட்சம் ஏக்கர் நெற்பயிர்கள் கருகின. மீதமுள்ள 1.5 இலட்சம் ஏக்கரில் கிணற்றுப் பாசன உதவியுடன் விவசாயிகள் பயிர் செய்து வருகின்றனர்.

தமிழகத்துக்குத் தர வேண்டிய நீரைச் சட்டப்படியும், அரசியல் அழுத்தத்தோடும் கர்நாடகத்திடமிருந்து திமுக அரசு பெற்றிருக்க வேண்டும். ஆனால், எதுவும் செய்யாமல், மத்திய அரசைக் காரணம் காட்டி, கால தாமதம் செய்ததைத் தவிர காவிரிப் பிரச்சினையில் எந்தத் துரும்பையும் கிள்ளிப் போடவில்லை.

இனியாவது, விவசாயிகள் மீது திமுக அரசு அக்கறை கொண்டு, காவிரி நீர் விவகாரத்துக்காக அனைத்துக் கட்சிகள் கூட்டத்தை உடனடியாகக் கூட்டித் தமிழக உரிமையைக் காக்க வேண்டும், - எனத் தெரிவித்துள்ளார். (04)








## சாய்ந்தமருது றியாழுல் ஜன்னா வித்தியாலயத்தில் சிறுவர் தினம்

(நூருல் ஹுதா உமர், யூ.கே. காலித்தீன்)

சிறுவர் தினத்தினை முன்னிட்டுக் கல்முனை வலயத்திற்குட்பட்ட சாய்ந்தமருது றியாழுல் ஜன்னா வித்தியாலயத்தில். சிறுவர் தினம் வெகு விமர்சையாகக் கொண்டாடப்பட்டது.

பாடசாலையின் அதிபர் எம்.ஏ.அஸ்தர் தலைமையில் நடைபெற்ற நிகழ்வுக்குக் கல்முனை வலயத்தின் உளவளத்துறை ஆசிரிய ஆலோசகர் எம்.எம்.சியாம் கலந்து கொண்டு மாணவர்களுக்கு பரிசுப்பொருட்களை வழங்கி வைத்தார்.

மேற்படி நிகழ்வில் பாடசாலை உதவி அதிபர், பிரதி அதிபர், ஆசிரியர்கள், அபிவிருத்திக் குழுச் செயலாளர் எம்.ஜி. அஹத், பாடசாலைப் பழைய மாணவர் சங்கச் செயலாளர் யூ.கே. காலித்தீன் ஆகியோரோடு பாடசாலை நலன் விரும்பிகளும் கலந்துகொண்டு பரிசில்களை வழங்கினர்.

சாய்ந்தமருதுக் கோட்டத்தில் இப்பாடசாலையில் தான் விசேட தேவையுடைய மாணவர்களுக்கான பிரத்தியேகக் கல்வி நிலையமும் அவர்களுக்கான சிறப்புத் தேர்ச்சிபெற்ற, கற்பிக்கக் கூடிய ஆசிரியர்களும் இருக்கின்றமை குறிப்பிடத்தக்கதாகும்.

## அவசர கொள்வனவு நடைமுறையில் மருந்து கொள்வனவை நிறுத்த முடிவு

அவசர கொள்வனவு நடைமுறையின் அடிப்படையில் மருந்துகளைக் கொள்வனவு செய்வதை உடன் அமுலுக்கு வரும் வகையில் நிறுததுவதற்கு சுகாதார அமைச்சு தீர்மானித்துள்ளது.

நாட்டில் அத்தியாவசிய மருந்துகளுக்குத் தட்டுப்பாடு நிலவிய நிலையில் இந்தியக் கடன் திட்டத்தின் கீழ், அவசரக் கொள்வனவு நடைமுறையின் அடிப்படையில் மருந்துகள் கொள்வனவு செய்யப்பட்டன.

எவ்வாறாயினும் சுகாதாரத் தொழிற்சங்கங்கள் மற்றும் பிற சிவில் அமைப்புகள் இது தொடர்பாகத் தொடர்ந்து எதிர்ப்பினைத் தெரிவித்து வந்தனர்.

இந்த நிலையில் அவசரக் கொள்வனவை உடன் அமுலுக்கு வரும் வகையில் நிறுததுவதற்குத் தீர்மானித்துள்ளதாக சுகாதார அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல்ல தெரிவித்துள்ளார். (04)




இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.68, குறசெட் வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 02.10.2023இல் வெளியிடப்பெற்றது.